

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் உத்தரவிற்கிணங்க, தஞ்சாவூர் மாவட்டம், கபிஸ்தலம் ஊராட்சியில் ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை சார்பில் அங்கன்வாடி மைய புதிய கட்டிடத்தை ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் இ.பெரியசாமி திறந்து வைத்தார். உடன் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சு.கல்யாணசுந்தரம், செ.இராமலிங்கம், மாவட்ட ஊராட்சிக் குழு உறுப்பினர் கோ.தாமரைச்செல்வன், பாபநாசம் ஒன்றிய பெருந்தலைவர் சுமதி கண்ணதாசன் மற்றும் அரசு உயர் அதிகாரிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள் உள்ளனர்.



விழுப்புரம் மாவட்டம் மரக்காணம் அருகே விஷ சாராயம் குடித்து இறந்த 12 பேரின் குடும்பத்திற்கு தலா 10 லட்சம் ரூபாய்க்கான காசோலையை அமைச்சர்கள் க.பொன்முடி, செஞ்சி மஸ்தான் ஆகியோர் குடும்பத்தாரிடம் வழங்கி ஆறுதல் தெரிவித்தனர். உடன் மாவட்ட ஆட்சியர் பழனி, சட்டமன்ற உறுப்பினர்கள் புகழேந்தி, டாக்டர் லட்சுமணன் மற்றும் பலர் உள்ளனர்.

### துரைமுருகன் - ஐ.பெரியசாமி - க.பொன்முடி - ஆ.இராசா - கனிமொழி கருணாநிதி - உதயநிதி ஸ்டாலின் பங்கேற்பு!

# தொ.மு.ச. பேரவை பொன்விழா மாநாடு: முதல்வர் மு.க.ஸ்டாலின் நாளை சிறப்புரை!

## நேற்று தொடங்கியது! மு.சண்முகம் எம்.பி. அறிக்கை!

சென்னை, மே 17 - தொழிலாளர் முன்னேற்றச் சங்கப் பேரவை எல்.பி.எப்.யின் பொதுக்குழு நேற்று (16.5.2023) தொடங்கியது. தொடர்ந்து 17, 18 ஆகிய தேதிகளில் பொன்விழா மாநாடும் சென்னை கலைவாணர் அரங்கில் நடைபெறுகிறது. மாநாட்டினை யொட்டி, 18 ஆம் தேதி பேரணி நடைபெறுகிறது. பேரவை பொன்விழா மாநாட்டில் கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மற்றும் அமைச்சர் பெருமக்கள், சட்டமன்ற , நாடாளுமன்ற உறுப்பினர்கள், கழக நிர்வாகிகள் கலந்துகொண்டு சிறப்புரை யாற்று கிறார்கள்.

இந்நிகழ்ச்சி குறித்து தொ.மு.ச. பொதுச் செயலாளர் மு.சண்முகம் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

தொ.மு.ச.பேரவை பொன் விழா மாநாடு - 25-வது பொதுக்குழு நேற்று (16.5.2023) தொடங்கியது.

தொடர்ந்து 17, 18 ஆகிய தேதிகளில் சென்னை கலைவாணர் அரங்கத்தில் நடைபெறுகிறது.

16-5-2023 காலை 9 மணிக்கு கொடியேற்றல், காலை 10 மணிக்கு ஐ.என்.டி.யு.சி., ஏ.ஐ.டி.யு.சி, எம்.எச்.எஸ்., சி.ஐ.டி.யு., ஏ.ஐ.டி.யு.சி., டி.யு.சி.சி., ஏ.ஐ.சி.சி.டி.யு., எம்.எல்.எப்., எல்.எல்.ப்., பி.எஸ்.ஐ ஆகிய தொழிற்சங்கத் தலைவர்கள் உரையாற்றினர்.

பிற்பகல் 2 மணிக்கு கழக துணைப் பொதுச் செயலாளர் ஆ.இராசா எம்.பி. பொதுக்குழுவை தொடங்கி வைத்து உரையாற்றினார்.

பேரவை பொதுச்செயலாளர் மு.சண்முகம் எம்.பி. ஆண்டறிக்கையை தாக்கல் செய்தார். பொருளாளர் கி.நடராசன் வரவு - செலவு கணக்கு தாக்கல் செய்தார்.

**கருத்தரங்கம்!**

மாலை 5 மணிக்கு நடைபெறும் கருத்தரங்கத்தில் "சமூக நீதி" என்ற தலைப்பில் திருச்சி சிவா எம்.பி., 'ஜனநாயகம்' என்ற தலைப்பில் திராவிட இயக்க ஆய்வாளர் க.திருநாவுக்கரசு, 'தொழில் வளர்ச்சி' என்ற தலைப்பில் சி.மகேந்திரன் (சி.பி.ஐ.), 'தொழிலாளர் நலன்' என்ற தலைப்பில் சு.வெங்கடேசன் எம்.பி. (சி.பி.ஐ.) ஆகியோர் பேசுகின்றனர்.

**இரண்டாம் நாள் நிகழ்ச்சி**

17-5-2023 புதன்கிழமை காலை 10 மணிக்கு குழுக்களின் விவாதம் நடைபெறுகிறது. மாலை 4 மணிக்கு தீர்மானங்கள் பொதுக்குழுவில் வைத்து ஒப்புதல் பெறப்படுகிறது.

**மூன்றாம் நாள் நிகழ்ச்சி**

18-5-2023 புதன்கிழமை காலை 10 மணிக்கு நடைபெறும் வாழ்த்தரங்கத்தில் கழக துணைப் பொதுச் செயலாளர்கள் - அமைச்சர் ஐ.பெரியசாமி, அமைச்சர் க.பொன்முடி, கனிமொழி கருணாநிதி எம்.பி., அந்தியூர் ப.செல்வராஜ் எம்.பி., கழக இளைஞர் அணிச் செயலாளர் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், அமைச்சர்கள் பி.கே.சேகர் பாபு, மா.சுப்பிரமணியன் மற்றும் நே.சிற்றரசு, மயிலை த.வேலு எம்.எல்.ஏ., தயாநிதிமாறன் எம்.பி., மற்றும் அமைச்சர் பெருமக்கள், கழக முன்னோடிகள் பேசுகின்றனர்.

மாலை 4 மணிக்கு சுவாமி சிவானந்தா சாலையில் அணி வகுத்து நடைபெறும் மாபெரும் பேரணியை கழக முதன்மைச் செயலாளர் அமைச்சர் கே.என்.நேரு தொடங்கி வைக்கிறார்.

இரவு 7 மணிக்கு கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விழா பேருரையாற்றுகிறார். மேலும் பொதுச் செயலாளர் - அமைச்சர் துரைமுருகன், கழகப்பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி., முதன்மைச் செயலாளர் கே.என்.நேரு ஆகியோர் சிறப்புரை யாற்றுகின்றனர்.

தொ.மு.ச. பொருளாளர் கி.நடராசன் நன்றியுரையாற்றுகிறார்.

### திராவிட மாடல் அரசின் இரண்டு ஆண்டு சாதனையை முன்னிட்டு

# திருவள்ளூர் மேற்கு மாவட்டத்தில் இளைஞர் அணி சார்பில் 70 பொதுக்கூட்டங்கள்!

## மாவட்டச் செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ. அறிவிப்பு!

திருவள்ளூர், மே 17 - திருவள்ளூர் மேற்கு மாவட்ட ஒன்றிய நகர பேரூர் கழக இளைஞரணி அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம் திருத்தணி ஜி.ஆர்.டி. ஹோட்டலில் மாவட்ட கழக செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் தலைமையில் நடைபெற்றது.

கூட்டத்தில் மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் டி.எம்.சுகுமாரன், டி.மோதிலால் ஆகியோர் முன்னிலை வகித்தனர். ஒன்றியச் செயலாளர் ஆர்த்தி ரவி வரவேற்றார்.

மாவட்ட கழக செயலாளர் எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ சிறப்புரையாற்றினார். அப்போது தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையில் நடைபெற்று வரும் திராவிட மாடல் அரசின் இரண்டு ஆண்டு சாதனையை முன்னிட்டு கழக இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் இளைஞரணி சார்பில் தெருமுனை பிரச்சாரக் கூட்டம் நடத்திட வேண்டும் என்று ஆணையிட்டார்.

அதன்படி திராவிட மாடல் அரசின் இரண்டு ஆண்டு சாதனை விளக்கம் தெருமுனை கூட்டம் திருவள்ளூர் மேற்கு மாவட்டத்தில் 70 கூட்டம் நடைபெறுகிறது. இதில் இளைஞர் அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் மற்றும் நிர்வாகிகள், தங்கள் பகுதியில் உள்ள மாநில மாவட்ட நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூர் ,கழக செயலாளர்களுடன் இணைந்து கூட்டத்தை சிறப்பாக நடத்திட வேண்டுமெனவும் மேலும் வரும் நாடாளுமன்ற தேர்தலில் திருவள்ளூர் மேற்கு மாவட்ட திமுக சார்பில் சிறப்பாக பணியாற்றி பெருவாரியான வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற பாடுபட வேண்டும் என தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் திருத்தணி தொகுதி மேற்பார்வையாளர் வி.பி.மணி, ஆர்.டி.இ.ஆதிசேசன், கே.திராவிட பக்தன், வி.சி.ஆர்.குமரன், சி.ஜெயபாரதி, எம்.மிதுன் சக்ரவர்த்தி, ப. சிட்டிபாபு, எஸ்.கே.ஆதாம், கே.என்.சுப்பிர மணியம், ஆர்த்தி ரவி, சி.என்.சண்முகம், பி.பழனி, சி.ஜெ.சீனிவாசன், என்.கிருஷ்ணன், பி.டி.சந்திரன், டி.ஆர்.கே.பாபு, ஜோதிக்குமார், கூளூர் எம்.ராஜேந்திரன், சி.சு.ரவிச்சந்திரன், எஸ்.மகாலிங்கம், கே.அரி கிருஷ்ணன், மோ.ரமேஷ், ஆர்.ஜெயசீலன், மற்றும் இளைஞர் அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், கழக நிர்வாகிகள் அனைவரும் கலந்து கொண்டனர். ம.கிரண் நன்றி கூறினார்.

### இனி இப்படி ஒரு சம்பவம் நிகழக் கூடாது!

# கள்ளச்சாராயம் எனும் தீமையை யாரும் நெருங்க வேண்டாம்!

## மருத்துவமனையில் சிகிச்சை பெற்றவர்களைச் சந்தித்த பின் முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவுறுத்தல்!

சென்னை, மே 17 - விழுப்புரம் மற்றும் செங்கல்பட்டில் கள்ளச் சாராயம் குடித்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருபவர்களை பார்த்து ஆறுதல் கூறிய முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், இனி இப்படி ஒரு சம்பவம் நிகழக் கூடாது என்றும், கள்ளச்சாராயம் எனும் தீமையை யாரும் நெருங்க வேண்டாம் என்றும் கள்எச் சாராயத்தை ஒழிக்க அரசு இரும்புக்கரம் கொண்டு செயலாற்றும்" என்று தமது சமூக வலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

இது குறித்துதமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

**கள்ளச்சாராய மரணங்கள் என்னும் துயரச் செய்தி வந்ததும், விழுப்புரம் மற்றும் செங்கல்பட்டு விரைந்தேன். இதற்குக் காரணமானவர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். கடமை தவறிய காவல் துறையைச் சேர்ந்த அதிகாரிகள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.**

**இனி இப்படி ஒரு சம்பவம் நிகழக் கூடாது என ஆய்வுக் கூட்டத்தில் கண்டிப்புடன் உத்தரவிட்டுள்ளேன். இந்த வழக்கு சிபிசிஐடிக்கு மாற்றப்பட்டுள்ளது.**

**கள்ளச்சாராயம் குடித்ததால் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வரும் அனைவருக்கும் உரிய சிகிச்சை அளிக்கவும் மருத்துவர்களிடம் அறிவுறுத்தியுள்ளேன்.**

**கள்ளச்சாராயம் எனும் தீமையை யாரும் நெருங்க வேண்டாம் எனப் பொதுமக்களைக் கேட்டுக் கொள்கிறேன். கள்ளச்சாராயத்தை ஒழிக்க அரசு இரும்புக் கரம் கொண்டு செயலாற்றும்!**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

### வெப்பம் அதிகரிக்கும் - வானிலை ஆய்வு மையம்!

# வெயிலின் தாக்கத்திலிருந்து பாதுகாத்துக் கொள்ள அறிவுறுத்தல்!

## அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.இராமச்சந்திரன் அறிக்கை!

சென்னை, மே 17 - வெயிலின் தாக்கம் அதிகரிக்கும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் அறிவுறுத்தியிருந்ததையடுத்து பொதுமக்கள் வெயிலின் தாக்கத்திலிருந்து தங்களை பாதுகாத்துக் கொள்ள தமிழ்நாடு அரசு வழிகாட்டு நெறிமுறைகளை அறிவித்துள்ளது.

இதுகுறித்து வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.இராமச்சந்திரன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு :-

இந்திய வானிலை ஆய்வு மையம் 15.05.2023 அன்று வெளியிட்டுள்ள அறிவிக்கையில், கடந்த 24 மணி நேரத்தில், தமிழ்நாட்டில் ஒரு சில பகுதிகளில் இயல்பான வெப்பநிலையில் இருந்து 20 - 30 C வெப்பநிலை உயர்ந்து காணப்பட்டதாகவும், உயர்ந்தபட்சமாக வேலூரில் 41.50C பதிவாகியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், சென்னை, கரூர், பரமத்தி பகுதிகளில் இயல்பான வெப்பநிலையை விட 20 - 30 C அதிகரித்து 400C ஆக வெப்பநிலை பதிவாகியுள்ளது என்றும், அடுத்த 48 மணி நேரத்தில் தமிழ்நாட்டின் ஒரு சில பகுதிகள் இயல்பு வெப்பநிலையில் இருந்து 20 - 30 C கூடுதலாக இருக்கும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், வெயிலின் தாக்கத்திலிருந்து பொதுமக்கள் தங்களை பாதுகாத்துக் கொள்ள கீழ்க்காணும் அறிவுரைகளை பின்பற்றுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

கோடைகால கடுமையான வெப்பத்தினால் ஏற்படும் பாதிப்புகளை தடுக்க செய்ய வேண்டியவை:

உடலின் நீர்ச்சத்து குறையாமல் பராமரிக்க, தேவையான அளவு தண்ணீர் குடிக்கவும்.

அவசியமான பணிகளுக்கு வீட்டை விட்டு வெளியே செல்லும்போது குடிநீரை கையுடன் எடுத்துச் செல்லுங்கள்.

ஓ.ஆர்.எஸ் (ORS), எலுமிச்சை ஜூஸ், இளநீர், மோர் மற்றும் பழச்சாறுகள் குடிக்கவும்.

இந்த பருவகாலத்தில் கிடைக்கும் பழங்கள், காய்கறிகள் மற்றும் வீட்டில் சமைத்த உணவை உண்ணுங்கள்.

நல்ல காற்றோட்டம் உள்ள மற்றும் வெப்பம் தணிந்த இடங்களில் இருக்கவும்.

மெல்லிய, தளர்வான பருத்தி ஆடைகளை அணியவும்.

வெளியில் செல்லும் போது காலணிகளை அணிவதுடன் குடையினையும் கொண்டு செல்லவும்.

உடல் சோர்வாகவோ, மயக்கமாகவோ உணரும் பொழுது உடனடியாக மருத்துவ ஆலோசனை பெறவும்.

**செய்யக் கூடாதவை**

வெயில் காலங்களில் வெறுங்காலுடன் வெளியே செல்லாதீர்கள்.

சிறிய குழந்தைகள், கர்ப்பிணிகள், முதியோர்கள் மதிய வேளையில் (12 மணி முதல் 3 மணி வரை) வெளியே செல்வதை தவிர்க்கவும்.

இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

### கள்ளச்சாராயம் விவகாரம்:

# மேலும் 1,558 குற்றவாளிகள் கைது!

## இதுவரை 1842 வழக்குகள் பதிவு!

விழுப்புரம்,மே17- விழுப்புரம் மாவட்டம் மரக்காணம் அருகே எக்கியர்குப்பத்தில் வம்பாமேடு பகுதியில் விற்பனை செய்யப்பட்ட கள்ளச்சாராயம் குடித்து 12 பேர் உயிரிழந்த நிலையில், 30க்கும் மேற்பட்டோர் மருத்துவமனையில் தீவிர சிகிச்சை பெற்று வருகின்றனர்.

உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு தலா 10 லட்சம் ரூபாயும், சிகிச்சை பெற்று வருபவர்களுக்கு தலா 50 ஆயிரம் ரூபாயும் நிவாரணமாக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.

இந்நிலையில் தமிழ்நாடு காவல்துறையின் தலைமை இயக்குநர் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார். அதில், "கடந்த 2 நாட்களாக தமிழகம் முழுவதும் நடந்த சாராய வேட்டையில் இதுவரை 1842 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு 1558 குற்றவாளிகள் கைது செய்யப்பட்டுள்ளனர். இந்த வேட்டையில் 19,028 லிட்டர் சாராயம் கைப்பற்றப்பட்டுள்ளது. 4943 லிட்டர் சாராய ஊறல்கள் அழிக்கப்பட்டது.

கள்ளச்சந்தையில் விற்கப்பட்ட 16,493 IMFL பாட்டில்கள் கைப்பற்றப்பட்டது. மேலும் 218 லிட்டர்கள் கைப்பற்றப்பட்டுள்ளது. கள்ளச்சாராயம் கடத்த பயன்படுத்தப்பட்ட ஓர் நான்கு சக்கர வாகனமும், ஏழு இரண்டு சக்கர வாகனங்களும் கைப்பற்றப்பட்டது.

இந்த 2023ஆம் ஆண்டு இதுவரையிலும் 55,474 சாராய வழக்குகள் பதிவு செய்யப்பட்டு 55,173 குற்றவாளிகள் கைது செய்யப்பட்டுள்ளனர். அதில் 4,534 பெண்கள் அடங்குவர். இந்த ஆண்டு இதுவரையிலும் 255,078 லிட்டர் கள்ளச்சாராயம் கைப்பற்றப்பட்டுள்ளது.

அதேபோல் கள்ளசாராயம் கடத்த, பயன்படுத்தப்பட்ட 69 நான்கு சக்கர வாகனங்கள் உட்பட 1,077 மோட்டார் வாகனங்கள் இந்த ஆண்டு மட்டும் கைப்பற்றப்பட்டுள்ளது. மேலும் கள்ளச்சாராய வழக்குகளில் ஈடுபட்ட 79 குற்றவாளிகள் குண்டர் தடுப்புச்சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது" என தெரிவிக்கப் பட்டுள்ளது.



விழுப்புரம் வடக்கு மாவட்டம் செஞ்சி மேற்கு ஒன்றியக் கழகம் சார்பில் தி.மு.க. அரசின் 2 ஆண்டு சாதனை விளக்க பொதுக்கூட்டத்தில் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான் சிறப்புரையாற்றினார். உடன் செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார், ஒன்றியச் செயலாளர் பச்சையப்பன், விஜயராகவன் மற்றும் பலர் உள்ளனர்.




நாமக்கல் அரசு மருத்துவக் கல்லூரி கலையரங்கில் மாணவர் மன்றம் துவக்க விழா, மருத்துவக் கல்லூரியில் பயிலும் மாணவச் செல்வங்களுக்குத் தேவையான நிதியுதவியை வழங்கிட விருட்சம் என்ற அமைப்பு துவக்க விழாவில் வனத்துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன் கலந்து கொண்டு நாமக்கல் கிழக்கு மாவட்டச் செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினருமான கே.ஆர்.என்.இராஜேஸ் குமார் எம்.பி. தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ரூ.41.03 லட்சம் மதிப்பில் மருத்துவ உபகரணங்களை மாணவர்கள் பயன்பாட்டிற்காக வழங்கினார். இந்நிகழ்ச்சியில் அரசு மருத்துவக் கல்லூரி முதல்வர் மருத்துவர் சாந்தா அருள்மொழி, துணை முதல்வர் மருத்துவர் எஸ்.வெங்கடசுப்பிரமணியன், அரசு வழக்கறிஞர் செல்வம் ஆகியோர் உட்பட மருத்துவக் கல்லூரி பேராசிரியர்கள், மாணவ, மாணவிகள் கலந்து கொண்டனர்.